# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

*நீதி அமைச்சின் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1856 ஆம் இலக்க 2014, மாச்சு மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை (2014.03.28) வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மேற்குறித்த பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அவ்வறிவித்தலின் 8 ஆம் பிரிவின் 1 ஆம் பகுதியின் மேலதிக கல்வித் தகைமைகள் மற்றும் 2 ஆம் பகுதியின் மொழித் தேர்ச்சி என்பன பின்வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றன :-

(i) 8 ஆம் பிரிவின் 1 ஆம் பகுதி "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட பட்டப்பின் படிப்பைப் பெற்றிருத்தல்" என்பதை, "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை சம்பந்தப்பட்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல்" என திருத்தஞ் செய்யப்படுகிறது.

(ii) 8 ஆம் பிரிவின் 2 ஆம் பகுதி "பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் பெறப்பட்ட பட்டத்தில்/இலங்கை சட்டக் கல்லூரிப் பரீட்சையின் பிரதான பாடமாக சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழியைக் கற்றிருத்தல்" என்பதை, "பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக மொன்றில் பெறப்பட்ட பட்டத்தில் பிரதான பாடமாக சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழியைக் கற்றிருத்தல்" என திருத்தஞ் செய்யப்படுகிறது.

அதன்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதி 2014.05.12 எனத் திருத்தஞ் செய்யப்படுகிறது.

**குறிப்பு**.- முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

கமலினி த சில்வா,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2014.04.03.

4-533

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

*ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன் தொழிற்பயிற்சி நெறியொன்றைப் பயிலுவதற்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி - 2014*

**(ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்காக அனுமதித்தல்)**

2014, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை 1848 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி "பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்" பகுதியில் "பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்" என்னும் தலைப்பில் வெளியான அறிவித்தல் மற்றும்

2014, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை 1849 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி "பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்" பகுதியில் "பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்" என்னும் தலைப்பில் வெளியான அறிவித்தல் என்பன தொடர்பாக.

மேற்படி அறிவித்தல்களுக்கு மேலதிகமாக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் பின்வரும் **இரு பாடநெறிகளுக்காக தமிழ் மொழி மூல விண்ணப்பதாரர்களிடமிருந்து மாத்திரம்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (கல்லூரி இலக்கம் 7 இற்காக).

4.4 **பாடநெறி இலக்கம் 4** - சமூக விஞ்ஞானம் - (தமிழ்)

4.4.1 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் வரலாறு, அரசியல், புவியியல் ஆகிய பாடங்களில் எவையேனும் ஒன்று உட்பட மூன்று (3) பாடங்களில் அல்லது இரண்டு (2) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.4.2 சமூகக்கல்வி மற்றும் வரலாற்றுப் பாடத்திற்கு அல்லது குடியுரிமைக் கல்வி/ வரலாறு/ புவியியல் பாடங்களில் எவையேனும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட பிரதான ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**இப்பாடநெறிக்கு பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத் துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்**.

4.15 ***பாடநெறி இலக்கம் 15*** *- நடனம் - (பரதம்)*

*4.15.1 2012 ஆம் ஆண்டில் நடந்த க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் பரத நடனம் உட்பட மூன்று (3) பாடங்களில் அல்லது இரண்டு (2) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;*

*மற்றும்*

*4.15.2 தமிழ் மொழி, கணிதம் மற்றும் பரத நடனம் உட்பட பிரதான ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*4.15.3 2012 ஆம் ஆண்டில் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் நடனம் (பரதம்) பாடத்தில் பெற்றுள்ள தரத்திற்கமைய மேலதிக புள்ளிகள் 3.4.4 இல் குறிப்பிட்டதற்கமைய வழங்கப்படும். (இது தொடர்பில் 2014.01.31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியாகும்.)*

**கவனிக்க வேண்டியது :**

*(ஶ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரிக்கு உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் போதியளவு இல்லாதவிடத்து 2012 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் பரத நாட்டியம் உட்பட* ***ஒரேயமர்வில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்த பெருந்தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர் அல்லாத இந்திய வம்சாவளித் தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*** *மேலும் வெற்றிடங்கள் காணப்படின் 2012 இல் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு (2) பாடங்களில் சித்திபெற்ற க. பொ. த. (சா. த.) பரீட்சையில் பரத நடனப் பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றுள்ள தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.)*

***இப்பாடநெறிக்கு பெருந்தோட்ட மாவட்டங்களில் வதியும் பெருந்தோட்டத் துறையில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளும் பெருந்தோட்ட மாவட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர் அல்லாத இந்திய வம்சாவளி, தமிழ் மொழி மூலமான விண்ணப்பதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.***

*மேற்குறிப்பிட்ட பாடநெறி இரண்டுக்கு தகுதிபெற்றவர்கள் 2014 ஆம் வருடத்திற்கு இப்பாடநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு முடியும்.*

* *இதுவரை விண்ணப்பிக்காதோர் மேற்படி இரு பாடநெறிகளுக்கும் மாத்திரம் விண்ணப்பிப்பதாயின் 2014.01.31 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்குரிய விண்ணப்பப்படிவத்தினைப் பயன்படுத்தி அதிலுள்ள அறிவுறுத்தலிலுள்ள விண்ணப்பப்படிவத்தை இடும் கடித உறையின் மாதிரிக்கமைய 2014.05.09 ஆந் திகதிக்கு முன்பாக பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.*

* *ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மேற்படி பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அந்த விண்ணப்பத்தில் புதிய தெரிவை உட்படுத்துவதற்காக பின்வரும் மாதிரிக்கமைய விண்ணப்பமொன்றை அனுப்ப வேண்டும் :*

> *2014.01. 31 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான விண்ணப்பப்படிவத்தில் பாடநெறி* ***தெரிவு மற்றும் பாடநெறி தெரிவு ஒழுங்குமுறையானது இரத்துச் செய்யப்படுவதுடன்*** *என்னால் முன்வைக்கப்படும் புதிய விண்ணப்பப்படிவத்தின் பாடநெறி மற்றும் பாடநெறி தெரிவு ஒழுங்கு முறையை ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்.*
>
> *மேலும் கல்விக் கல்லூரி தெரிவின்போது இதற்கு* ***முன்பு என்னால் தெரிவுசெய்யப்பட்ட பாடநெறி மற்றும் தெரிவு ஒழுங்குமுறை இரத்தாகிவிடும்*** *என்பதையும் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறி மற்றும் தெரிவு ஒழுங்குமுறைக்கு ஏற்ப தெரிவு நடைபெறும் என்பதை நான் நன்கு அறிவதுடன் புதிய விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறி மற்றும் தெரிவு ஒழுங்குமுறைக்கு ஏற்ப நான்* ***தெரிவுசெய்யப்படும் பாடநெறிக்கோ கல்விக் கல்லூரிக்கோ அனுமதி பெறுவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றேன்.***

*மேற்படி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 2014.05.09 ஆந் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் " பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி), கல்விக் கல்லூரிகள் பிரிவு, கல்வி அமைச்சு, 'இசுருபாய', பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.*

விண்ணப்பத்தை அனுப்பும் கடிதவுறையின் மாதிரி பின்வருமாறு :-

| "2014.04.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பித்தல்". | |
|---|---|
| | பிரதம ஆணையாளர் (ஆசிரிய கல்வி),<br>கல்விக் கல்லூரிகள் பிரிவு,<br>கல்வி அமைச்சு,<br>"இசுருபாய",<br>பத்தரமுல்லை. |

அநுர திசாநாயக்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்லை,
2014.04.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**2014.04.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி ஸ்ரீபாத தேசிய கல்விக் கல்லூரிக்கு விண்ணப்பித்தல்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.

2. நிரந்தர வதிவிட முகவரி :----.

3. தொலைபேசி இலக்கம் :----.

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

5. 2014.01.31 ஆந் திகதி மற்றும் 2014.02.07 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய விண்ணப்பித்துள்ள பாடநெறிகளும் தெரிவு ஒழுங்குமுறையும் :-

| விருப்பத் தெரிவு | பாடநெறி இலக்கம் | தே. க. கல்லூரிக்கு உரிய இலக்கம் | பாடநெறிக்குரிய மொழிமூலம் S/ T/ E | பாடநெறி இலக்கம் (25) மற்றும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் (S/T/E) | 11/25 பரீட் சைக்குத் தோற்றவுள்ள நகர இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

6. தாங்கள் மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பிப்பதாயின், புதிய பாடநெறி மற்றும் பாடநெறி தெரிவு ஒழுங்குமுறை என்பனவற்றைப் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடவும். பாடநெறிக்கு தெரிவுசெய்யும்போது, புதிய பாடநெறித் தெரிவு மட்டுமே கருத்திற்கொள்ளப் படும் :-

| விருப்பத் தெரிவு | பாடநெறி இலக்கம் | தே. க. கல்லூரிக்கு உரிய இலக்கம் | பாடநெறிக்குரிய மொழிமூலம் S/ T/ E | பாடநெறி இலக்கம் (25) மற்றும் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழி மூலம் (S/T/E) | 11/25 பரீட் சைக்குத் தோற்றவுள்ள நகர இலக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

